சேலம், சென்னை, காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சியின் மூலம் பயிற்சி பெறுகிறவர்கள் சென்னை மாநகராட்சியிலே பணிபுரிவதற்குத் தகுதியானவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, தண்டையார்பேட்டையில் அமைந்திருக்கின்ற தொற்று நோய் மருத்துவமனையானது ஆசிய துணைக் கண்டத்திலேயே மிகவும் பிரசித்திபெற்ற அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறையான அனுமதி பெறாததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக அறிவித்திருந்தார்கள். மீண்டும் அதற்குண்டான முறையான அனுமதியைப் பெற்று நடப்பு நிதியாண்டிலேயே—மனித உயிர்க்கொல்லி நோய்களான மலேரியா, காலரா போன்ற நோய்களைக் கண்டறிவதற்கு உதவும் இப்பயிற்சிக்கான— இந்த வகுப்பினை உடனடியாகத் தொடங்குவதற்கு முன் வருவாரா என்பதை மீண்டும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொற்று நோய் மருத்துவமனையிலே மீண்டும் பயிற்சி பெறவேண்டும் என்று சொன்னால், அதற்கு அடிப்படையான அந்த வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, மாநகராட்சி முறையாக அரசுக்கு விண்ணப்பிக்குமேயானால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

8—

மாணவியர் விடுதி

•11097—திரு. சோ. இராசேந்திரன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் பள்ளி மாணவிகளுக்கான தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

2003 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் ஒட்டுமொத்தமான மக்களின் ஆதரவைப் பெற்று திராவிடத்தின் ஒளிவிளக்காக, நாளைய இந்தியத் திருநாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கோடிக்கணக்கான தொண்டர்களில் என்னை அடையாளம் கண்டு, அமைச்சர் பொறுப்பைக் கொடுத்ததற்காக என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியை முதலில் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோவில்பட்டியில் புதிய மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகரம் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு பெரிய நகரமாகும். அங்குள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 2,000 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். பெரும் பகுதி கிராமப்புற ஏழை எளிய மாணவிகள் கல்வி பயில்கின்ற கோவில்பட்டி நகரத்தில் தற்போது ஆதிதிராவிடர் மகளிர் விடுதி என்பது அரசின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்றது. அந்த விடுதியிலே கிட்டத்தட்ட 172 மாணவியர் தங்கி கல்வி பயில்கின்றார்கள். போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும், பள்ளி மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு இட ஒதுக்கீடு என்பது குறைந்த அளவிலே உள்ளதன் காரணமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக புதிதாக மாணவர் விடுதி அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிதிநெருக்கடியில் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதால் அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு புதிய விடுதிகள் திறப்பது என்பது தற்போது சாத்தியம் இல்லை.

[2003 ஜனவரி 28

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலே இருந்து அந்த விடுதிக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்துள்ள அடிப்படையிலே அரசினுடைய பங்களிப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருப்பது புதிய விடுதிகள் தொடங்குவதற்கு அல்ல; விடுதிகள் கட்டுவதற்காகத்தான். ஆனால், இவர் புதிய விடுதிகள் தொடங்குவதற்காகக் கேள்வி கேட்டிருக்கிறார். நிதி ஒதுக்கி இருந்தால், அங்கே அவர் தொகுதியில் ஏதாவது ஒரு கட்டடம் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

9—

தனித் தொழில் தீர்ப்பாயம்

***27627—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளிலும் உள்ள பஞ்சாலைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க இத்தொழிலுக்கென தனித் தொழில் தீர்ப்பாயம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏற்கெனவே ஒரு சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.